## இலங்கை மின்சார சபை - 2011

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இந்த அறிக்கையின் 1.2 மற்றும் 1.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 தொகுதிகளினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 வரையறுத்த லங்கா மின்சாரக் கம்பனி (தனியார்)(எல்ஈசீஓ)

இலங்கை மின்சார சபையின் 55 சதவீதம் சொந்தமான துணைக் கம்பனியான லங்கா மின்சாரக் கம்பனியின் கணக்காய்வாளர்கள் பின்வருமாறு அக் கம்பனியின் தொகுதி நிதிக்கூற்றுக்களின் மீது முனைப்பழியான கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்கியிருந்தனர்.

போதியளவு தகவல்கள் கிடைக்காமை காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த ஆண்டின் இறுதியிலுள்ள உட்கட்டமைப்பு நடைபெறும் வேலைகள் கணக்கின் அண்ணளவாக ரூபா 590 மில்லியன் தொகையான மீதியின் சரியானதன்மை மற்றும் பூரணத்துவத்தை உறுதிப்படுத்த கணக்காய்வாளர்களிற்கு இயலாதிருந்தது.

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 16 மில்லியன் தொகையான ‘‘வழங்கல் உட்கட்டமைப்பு’’ கம்பனியின் கடன் வழங்குனரால் விதந்துரைக்கப்பட்ட நியம வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி வெளிப்படுத்தப்பட்டது. இம் மீள் மதிப்பீட்டு முறையானது அச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை வெளிக்காட்டவில்லை. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு

மிகை மற்றும் தொடர்புடைய பெறுமானத் தேய்வுக் கட்டணம் என்பவை மீது அவற்றின் விளைவுகள் எதனையும் மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது.

- களனி மற்றும் காலிக் கிளைகளின் பேரேட்டு மீதிகள் முறையே ரூபா 18 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியனால் சிட்டையிடல் முறைமை மீதிகளை மிகைத்திருந்ததுடன் களுத்துறைக் கிளையின் சிட்டையிடல் முறைமை மீதியானது ரூபா 8 மில்லியனால் பேரேட்டு மீதியினை மிகைத்திருந்தது இதனை போதியளவு தகவல்கள் கிடைக்காமை காரணமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

(இ) சீஈபீ இடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் படி செலுத்த வேண்டிய மீதிகள், பேரேட்டு மீதிகளுடன் ரூபா 14 மில்லியானல் இணங்கியிருக்கவில்லை இதற்காக திருப்திகரமான விளக்கமளித்தல் கிடைத்திருக்கவில்லை. மேலும், பெறப்பட வேண்டிய ரூபா 9 மில்லியன் தொகையான மீதி தொடர்பில் சீஈபீ இடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலொன்று கிடைத்திருக்கவில்லை.

### 1.2.2 வரையறுத்த எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- இணங்கப்பட்டவாறு கம்பனியினதும் அதன் துணைக் கம்பனிகளதும் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- மீளாய்வாண்டில் கூட்டிணைக்கப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட பவான் தனவி (தனியார்) கம்பனி என்ற பெயரில் ஒரு புதிய துணைக் கம்பனியை உருவாக்குவதற்கு சீஈபீ இன் பணிப்பாளர்களர் சபையினால் வழங்கப்பட்ட சம்மதம் கணக்காய்விற்காக கிடைக்கப்பெறவில்லை.

### 1.2.3 ஒன்றிணைத்தலில் உள்ள குறைபாடுகள்

காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளின் அசைவிற்கும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டிற்கும் இடையே ரூபா 122 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 1.3 இலங்கை மின்சார சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **எஸ்எல்ஏஎஸ் 5 - பதிவேட்டுப் பொருட்கள்:** நியமத்தின்படி, பதிவேட்டுப் பொருட்கள் கிரயம் அல்லது தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் அளவிடப்படவேண்டியதுடன் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் முதல் வந்தது முதல் வெளியேற்றல் (எவ்ஐஎவ்ஓ) அல்லது நிறையளித்த சராசரிக் கிரய வாய்ப்பாட்டினை பயன்படுத்துதவதன் மூலம் ஒப்படைத்தல் வேண்டும். நியமத்திற்கு முரணாக, சபையானது விநியோக வலயங்களில் அதனது இருப்பு மதிப்பீட்டிற்காக நியம விலைகளைப் பயன்படுத்தியிருந்தது.

  இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பணிப்புக்களின் படி, விலைத் தளம்பலுக்கு உட்பட்ட இருப்புக்களை பெறுமதியிடுவதற்காக நியமக் கிரயங்கள் அனுமதிக்கப்படலாம் ஏனைய நிலைமைகளில் இருப்புக்களின் பெறுமதி கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் பெறுமதியிடப்பட வேண்டும். நடப்பு நிலமைகளின் படி, விலைகள் மாத்திரம் அதிகரித்துச் சென்றது ஆனால் தளம்பலுக்குட்பட்டிருக்கவில்லை. அனேக சந்தர்ப்பங்களில் சபை அதனது நியம விலைகளை உள்ளபடியான விலைகளிலும் அதிகரித்துக் காட்டியிருந்தமை தெளிவாகின்றது. உதாரணமாக: 2011 இல் பொருளின் விலைகள் மற்றும் ஊழிய கூலிகளை மிகையாக மதிப்பிடுவதன் மூலம் தேறப்பட்ட தேறிய வருமானம் முறையே ரூபா 2,920 மில்லியன் (2010 - ரூபா 1,785 மில்லியன்) மற்றும் ரூபா 803 மில்லியன் (2010 - ரூபா 548 மில்லியன்) ஆக இருந்தது. அத்துடன் வருமானக் கூற்றில் வருமானமாகத் தேறப்பட்ட மேந்தலைகளாக ரூபா 1,255 மில்லியன் தொகையொன்று (2010 - ரூபா 962 மில்லியன்) வேலைகள் கிரயத்திற்குச் சாட்டப்பட்டிருந்தது. (உள்ளபடியாக பயன்படுத்திய ஊழிய மணித்தியாலங்களிற்காக நியம வீதங்களை பிரயோகித்து கணிக்கப்பட்டது)

  அதன் விளைவாக, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள், பேணுதல்கள் மற்றும் முடிவடைந்த வேலைகளின் நியாயப் பெறுமதிகள் கேள்விக்குறியாக உள்ளன.

(ஆ) **எஸ்எல்ஏஎஸ் 16 – ஊழியர் நலன்கள்** 120 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கை மின்சார சபையின் ஓய்வூதிய நிதியம் தொடர்பாக வேண்டப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப் பட்டிருக்கவில்லை.

(இ) **திருத்தப்பட்ட எஸ்எல்ஏஎஸ் 18 –ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (பீபீஈ)** நியமத்திற்கு முரணாக, இலங்கை மத்திய வங்கியினால் இந்த ஆண்டிற்காக வெளியிடப்பட்ட மொத்த விற்பனை விலைச் சுட்டெண், இறக்குமதி பெறுமதிச் சுட்டெண் மற்றும் மொத்த தேசிய உற்பத்தி விகிதாசாரம் என்பவற்றிலேற்படும் மாற்றங்களின் எண்கணித எளிய சராசரியினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட விலையினைக் கொண்டிருக்கும் பெறுமதிகளைப் பெருக்குவதன் மூலம் சபை அதனது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை (பீபீஈ) வருடந்தோரும் மீள் மதிப்பீடு செய்கிறது.

மேலும், பின்பற்றப்பட்ட முறையின் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன அவற்றின் மதிப்பிடப்பட்ட பொருளாதார ஆயுட்காலம் வரை மாத்திரமே மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதன் பின்னர் அச்சொத்துக்கள் கைதவிர்க்கப்படும் வரை ரூபா 1 முகப்பெறுமதியில் பேணப்பட்டு நீண்டகாலமாக பயன்படுத்தப்படு வருகின்றன.

மேலும், பின்வரும் தகவல்களும் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

* விற்பனைக்காக அல்லது கைதவிர்ப்பிற்காக வைக்கப்பட்டுள்ளவைகளாக வகைப்படுத்திய சொத்துக்கள்
* தற்காலிகமாக பயன்படுத்தாதுள்ள பீபீஈ இன் கொண்டிருக்கும் தொகை

(ஈ) **எஸ்எல்ஏஎஸ் 21 – அந்நியச் செலவாணி வீத மாற்றங்களின் தாக்கம்**: வெளிநாட்டு நிதியளித்த செயற்திட்டங்களால் நிதியளிப்புச் செய்யப்பட்ட மூலதனச் சொத்து நிர்மாணித்தல் காலப்பகுதியில் எழுந்திருந்த செலாவணி வேறுபாடுகளிற்கான கணக்கீட்டுக் கொள்கையானது நிதிக்கூற்றுக்களின் கணக்கீட்டுக் கொள்கைகள் 2.3.1 ஆம் பந்தியில் வெளிக்காட்டப்பட்ட கொள்கையால் மேவுகை செய்யப்பட்டிருந்தது.

(உ) **எஸ்எல்ஏஎஸ் 24 – அரசாங்க மானியம் மற்றும் அரசாங்க உதிகளிற்கான கணக்கீடு**: கிராமிய மின்சாரம் வழங்கல் செயற்திட்டங்கள் அடங்கலான மின்சாரத்தை பிறப்பித்தல், பரிமாற்றம் செய்தல் மற்றும் விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு

உதவிகள் மற்றும் மூலதன மானியங்கள் என்பவற்றில் சில திறைசேரியினால் மூலதன பங்களிப்பாக கருதப்படாதிருந்த போதிலும் அவை நீண்டகாலமாக பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமாகக் கருதப்பட்டிருந்தன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி, சபைக்கான மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 51 பில்லியன் ஆனதுடன் சபையின் நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 96 பில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களிற்கும் சபையின் நிதிக்கூற்றுக்களிற்குமிடையே நிலவிய ரூபா 45 பில்லியன் அரசாங்க மானிய வேறுபாட்டிற்காக நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டடிருந்த கணக்கீட்டு நடைமுறை நியமத்துடன் இணங்கியிருக்கவில்லை.

(ஊ) **எஸ்எல்ஏஎஸ் 41 – நிலையான சொத்தக்களின் காலக்கழிவு**: நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களிற்காக காலகழிவிற்காக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வேலைகளிற்குப் பயன்படுத்திய பொருட்கள், ஊழியம் மற்றும் மேந்தலையினை நியமக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்ததன் விளைவாக எழுந்த முரண்களான சாதக மூலப்பொருள் விலை முரண், ஊழிய வீத முரண் மற்றும் மேந்தலை முரண் என்பவற்றின் ரூபா 4,979 மில்லியன் கூட்டு மொத்தம் ( 2010 - ரூபா 3,295) பேணுகை மற்றும் மூலதன வேலைகளிற்கு இடையே பகிர்ந்தளிக்கப்படாது விற்பனைக் கிரயத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. எனவே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆண்டுக்கான நட்டம் மற்றும் மூலதன வேலைகளின் பெறுமதி என்பன உண்மையான நிலையினை வெளிக்காட்டியிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ரூபா 67,245 மில்லியன் தொகையான முன்கொண்டு வரப்பட்ட வரி நட்டம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) நாட்டின் வலுத்துறை அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த சில வெளிநாட்டுதவிக் கடன்கள் சபைக்கு உப கடனாக வழங்கப்பட்டிருந்தது. 2005 திசெம்பர் 31 இல் நிலவிய உப கடன்களின் ரூபா

61,996 மில்லியன் தொகையான ஐம்பது சதவீதம் உரிமை மூலதனத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 30,998 மில்லியன் 2006 மார்ச் 01 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தனியொரு கடனாக கருதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வட்டி வீதம் மற்றும் மீளளித்தல் முறை குறித்து அரசாங்கம் அறிவித்திருக்காமையால் அக்கடன் தீர்க்கப்படாத கடனாக காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களில் எவ்வித வட்டியும் சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அந்த நிலமை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 17,447 மில்லியனான கடன் மீளளிப்பு மீதி மற்றும் ரூபா 165 மில்லியனான ஏனைய ஒதுக்க மீதி (வெளிநாட்டுச் செலவாணி ஒதுக்கம் என தவறாக பெயரிடப்பட்ட) என்பவற்றை மூலதன ஒதுக்கங்கள் கொண்டிருந்தன. எனினும், அந்த ஒதுக்கங்களின் தன்மை, நோக்கம் முதலியவறான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) காப்புறுதி எஸ்க்ரோ நிதிய முதலீட்டிலிருந்து கிடைத்திருந்த வட்டி வருமானம் எஸ்க்ரோ நிதியத்தின் வருமானமாக கொள்ளப்படாது நிதியத்தை தோற்றுவித்த காலம் முதல் சபையின் வருமானமாகக் கொள்ளப்பட்டிருந்தது. உதாரணமாக ரூபா 317 மில்லியன் தொகையான வட்டி வருமானம் (2010 இல் ரூபா 404 மில்லியனாகக் காணப்பட்டது) சபையின் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானமாகக் கருதப்பட்டமையின் விளைவாக மீளாய்வாண்டிற்கான சபையின் நட்டம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான காப்புறுதி எஸ்க்ரோ நிதிய மீதி என்பன அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஊ) ரூபா 3,047 மில்லியன் நிகழ்ச்சித்திட்டக் கடனொன்று பெறவேண்டியமைக்கான சான்றுகள் பெற்றுக்கொள்ளப்படாது 2003 முதல் திறைசேரியிடமிருந்து பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது..

(எ) 2012 பெப்ரவரி 29 இல் பணிக்கொடை கணிக்கும் மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கமைய பணிக்கொடைக் கணக்கு சீராக்கப்படாததன் விளைவாக ஆண்டிற்கான நட்டமும் 2011 திசெம்பர் 31 இல் காணப்பட்டவாறான பணிக்கொடைப் பொறுப்பும் ரூபா 480 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டன.

(ஏ) 2011 இல் கொள்வனவு செய்யப்பட்ட புதிப்பிக்கப்படத்தக்க சக்திக்காக செலுத்த வேண்டிய ரூபா 57 மில்லியன் கணக்கீடு செய்யப்படாததன் விளைவாக ஆண்டிற்கான நட்டமும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி நிதிக்கூற்றுக்களில்

காட்டப்பட்ட அட்டுறுச் செலவினமும் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஐ) காற்று வலு கம்பனியொன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 35 மில்லியன் வரிச் சீராக்கம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நட்டம் மற்றும் செலுத்த வேண்டிய மீதி என்பன அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ஒ) பெற்றோலியக் கூட்டத்தாபனத்தினால் (சீபீசீ) மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் காரணமாக 2011 யூலை – செப்தெம்பர் வரையான காலத்திற்காக ஒரு லீற்றரிற்கு இணங்கப்பட்ட விலையான ரூபா 75 இற்கும் மேற்பட்ட விலையில் கணிப்பீடு செய்து ரூபா 1,369 மில்லியன் தொகையான எரிபொருள் கிரயம் வலு பிறப்பித்தல் கம்பனியொன்றிற்கு மீள்நிரப்பல் செய்யப்பட்டிருந்தது. அந்த மேலதிகக் கொடுப்பனவு பொருத்தமற்ற விதத்தில் விற்பனைக் கிரயத்திலிருந்து அகற்றப்பட்டு தொடர்புபட்ட தரப்பினர்களிற்கிடையே முறையான உடன்படிக்கையொன்றின்றி சீபீசீ இடமிருந்து பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான நட்டம் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் மீதி என்பன அத்தொகையால் முறையே குறைத்தும் அதிகரித்தும் கூறப்பட்டிருந்தன.

(ஓ) தனிப்பட்ட கணக்குகளிற்கு சிட்டைகளை தாக்கல் செய்வதற்கு முன்னர் நுகர்வோரால் மாதாந்தச் சிட்டைகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக தனிப்பட்ட கணக்குகளில் தவறான மேலதிகச் செலுத்தல்கள் காட்டப்பட்டன. அக்குறைபாடு காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன்பட்டோர் ரூபா 764 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மூன்று மாதங்களிற்கு குறைவான கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 748 மில்லியன் பதிவுசெய்தல் வழு வெளிக்காட்டப்பட்டது.

(ஔ) முன்னைய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட வேலைகளிற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட பொருட்கள் அதனைத் தொடர்ந்துவரும் ஆண்டுகளில் களஞ்சியத்திற்கு திருப்பியனுப்பப்படுவது வழக்காமாகும். எவ்வாறாயினும், தற்போதைய நடைமுறையின் படி, அவ்வாறு திருப்பப்பட்ட பொருட்கள் வழங்கிய நேரத்தில் நிலவிய விலையில் பெறுமதியிடப்படாது நடப்பு நியம விலையில் இருப்பிற்கு எடுக்கப்பட்டு முடிவுறா வேலையில் சீராக்கப்பட்டிருந்தது. ஆகையால், இருப்பும் முடிவுறா வேலையும் குறைத்துக் கூறப்பட்டன.

உதாரணமாக வடமேல் மாகாண அலுவலகத்தினால் களஞ்சியத்திற்கு திருப்பியனுப்பப்பட்ட பொருட்கள் 2011 இல் நிலவிய விலையில் ரூபா 105 மில்லியன என பெறுமதியிடப்பட்டிருந்தது.

(க) கடன்பட்டோரிடமிருந்து நிலுவையாக உள்ள மீதிகளிற்காக சபையின் கொள்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடு மேற்கொள்ளப்படாமையின் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வியாபாரக் கடன்பட்டோரும் நட்டமும் ரூபா 289 மில்லியனால் அதிகரித்தும் குறைத்தும் கூறப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **தொகை ரூபா மில்லியன்** |
|---|---|
| கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி மொத்த ஏற்பாடு | 2,207 |
| நிதிக்கூற்றுக்களின் படி மொத்த ஏற்பாடு | 1,918 |
| **குறை மதிப்பீடு** | **289** |

(கா) ரூபா 327 மில்லியன் மற்றும் ரூபா 664 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான வழமைக்குமாறான வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மற்றும் வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள் அதேதொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(கி) சபையின் வடமேல் மாகாண அலுவலகத்தின் முடிவுறா வேலைகள் கணக்கு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மற்றும் வரவு மீதிகளைக் கொண்ட வேலைகளை உள்ளடக்கியிருந்தது. வருட இறுதி மீதியுடன் அவ்வாறான செலவு மற்றும் வரவு மீதிகள் மதிப்பிடப்பட்டிருந்தமையின் விளைவாக முடிவுறா வேலைகள் ரூபா 40 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டன. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று மாதங்களிற்கும் மேலாக அச்செலவு மீதிகள் சீராக்கப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(கீ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 3 விநியோக வலயங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த காணிகளின் பெறுமதி மீள்மதிடப்படாமையின் விளைவாக காணியின் பெறுமதி ரூபா 17 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கு) அனல் மின் சக்திச் செயற்திட்டத்தின் ரூபா 52,736 மில்லியன் பெறுமதிகொண்ட காணிகள், அலுவலக கட்டிடங்கள், மின்பரிமாற்ற வழிகள், உப நிலையங்கள், துறைமுக வசதிக்கான இறங்குதுறை, பாரிய படகுகளும் இழுவைப்படகுகளும், ஊழியர்களின் வதிவிடத் தொகுதி போன்ற ஆதனங்கள் சபையினால் கையேற்கப்பட்டதுடன் செயற்திட்டத்தின் I ஆம் கட்டம் 2011 திசெம்பர் 31 இல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த விடயங்களை ஆகக் குறைந்தது பகுதி அடிப்டையிலேனும் மூலதனமாக்காது தொடர்ந்தும் முடிவுறா வேலையின் கீழ் காணப்பட்டது.

(கூ) திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,000 மில்லியனை வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் தொழிற்படு மூலதன அசைவாக காண்பிப்பதற்குப் பதிலாக முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்ட வருமான வரியாக சபையின் காசோட்டக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(கெ) 2011 திசெம்பரில் செலுத்தப்பட்ட மிகையூதியத்திற்காக உ.போ.செ.வ. ஒதுக்கீடு செய்யப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள அட்டுறுச் செலவினம் ரூபா 25 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கே) யாழ்ப்பாண வலய மின்சார வழங்கல் புனர்நிர்மாண செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண வலய மின்சார புனர்நிர்மாணத்திற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 37 மில்லியன் மூலதன மானியம் தவறுதலாக திறைசேயிடமிருந்தான கடனாக கணக்கீடு செய்யப்பட்டமையின் விளைவாக 2011 திசெம்பர் 31 உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பங்களிப்பு மூலதனமும் திறைசேரியிடமிருந்தான கடன்களும் அதே தொகையால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

பின்வரும்கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | நிதிக்கூற்றில் காணப்படும் விடயம் | துணைப் பதிவேடு | மீதி நிதிக் கூற்றுக்களின் படி | மீதி துணைப் பதிவேட்டின் படி | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில். |
| (அ) | எல்ஈசீஓ இடமிருந்து பெறவேண்டிய தொகை | எல்ஈசீஓ இன் நிதிக்கூற்றுக்கள் | 1,628 | 1,736 | (108) |
| (ஆ) | எல்ஈசீஓ இற்கு செலுத்தவேண்டிய தொகை | எல்ஈசீஓ இன் நிதிக்கூற்றுக்கள் | - | 9 | (9) |
| (இ) | அனல் மின்சக்தி செயற்திட்டத்திற்கான மூலதனப் பங்களிப்பு (கட்டம் - 1) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் | 3,586 | 3,570 | 16 |
| (ஈ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் -வலயம்-3 | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2,454 | 2,462 | (8) |
| (உ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் -வலயம்-3 | பொதுப் பேரேடு | 2,454 | 2,487 | (33) |
| (ஊ) | மோட்டார் வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களிற்கான திரண்ட பெறுமானத்தேய்வு | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1,205 | 1,186 | 19 |
| (எ) | மோட்டார் வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களிற்கான திரண்ட பெறுமானத்தேய்வு | பொதுப் பேரேடு | 1,205 | 1,219 | (14) |
| (ஏ) | இலங்கை அனல்மின் கம்பனியிடமிருந்து (எல்சீசீ) பெறவேண்டியவை | எல்ஈசீஓ இன் நிதிக்கூற்றுக்கள் - குறிப்பு 13 | - | 11 | (11) |
| (ஐ) | சேலவின முற்பணம் - எல்சீசீ | எல்ஈசீஓ இன் நிதிக்கூற்றுக்கள் - | - | 1,606 | (1,606) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | குறிப்பு -13 (சீஈபீ செலவின முற்பணங்கள்) | | | |
| (ஒ) | வியாபாரக் கடன்பட்டோர் - வலயம் 2 | சிட்டையிடல் பொழிப்பு மற்றும் காலப்பகுப்பாய்வு (பட்டோலை மீதி) | 1,906 | 1,956 | (50) |
| (ஓ) | முடிவுறா வேலை (மூலதனமல்லாத) - வலயம் 3 | ஏனைய கடன்பட்டோரின் காலப்பகுப்பாய்வு | 110 | 86 | 24 |
| (ஔ) | வலயம் - 3 இன் ஏனைய கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்ட ஏனைய கடன்பட்டோர் | காலப்பகுப்பாய்வு | 2,049 | 2,045 | 4 |
| | **மொத்தம்** | | | | **(1,776)** |

### 1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேல் மாகாணம் தெற்கு - II இல் உள்ள பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களில் எல்ஈசீஓ தொடர்பில் நீண்ட காலமாக நிலுவையாக உள்ள ரூபா 33 மில்லியன் கூட்டுத்தொகையான மூன்று பெறவேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 27 மில்லியன் கூட்டுமொத்தமான மூன்று கொடுபட வேண்டிய மீதிகள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாது காணப்பட்டன.

(ஆ) 2008 ஜனவரி 24 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தினால் அறிவுறுத்தப்பட்டவாறு அடுத்து வரும் ஆண்டுகளில் எழுகின்ற சபையின் ஏதும் வரிப் பொறுப்பிற்கெதிராக ரூபா 38 மில்லியன் பொ.சே.வரி மேலதிகக் கொடுப்பனவை எதிரீடு செய்யாது 2002 ஜனவரி முதல் பெறவேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் முன்னெடுத்து வரப்பட்டிருந்தது.

(இ) பத்து ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாகக் காணப்படும் வலயம் I இன் மின்சாரக் கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 447 மில்லியனுக்கு மேற்கொள்ளப்பட்ட முழுமையான ஏற்பாட்டை அறவிடுவதற்காக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காது ஆண்டுதோரும் முன்னெடுத்து வரப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் செயற்பாட்டிற்காக அரசாங்கம் பல மானியங்களையும் உதவிகளையும் அத்துடன் சலுகைகளையும் வழங்கியுள்ளமையால் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியவையாகப் பதியப்பட்டிருந்த ரூபா 1,622 மில்லியன் தொகையான மின்சார தள்ளுபடிகள், ரூபா 3,451 மில்லியன் தொகையான தெரு வெளிச்சம் வழங்கல் என்பவற்றின் பெறுவனவு ஐயத்திற்குரியதாகும்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் சபையின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர் ஆகியோர் பின்வருமாறு உரைத்திருந்தனர்

***"அறவிடுதல் அல்லது திறைசேரிக்கான ஏனைய செலுத்துகைகளிற்கு எதிராக தீர்ப்பனவு செய்யும் நோக்கில் திறைசேரியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மேற்கூறிய மீதிகள் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, திறைசேரி பொருத்தமான தீர்மானத்தை அறிவிக்கவில்லையாயின் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய தொகையினை ஐயத்துக்கரியதாக கொள்ள முடியாதுள்ளது"***

(உ) 2008 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 1572/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கு எதிராக இரண்டு மதங்களிற்கான மதிப்பிடப்பட்ட மின்சார பாவனையின் கிரயத்திற்குச் சமமான தொகையினை மின்சார சபை தனது சகல வாடிக்கையாளர்களிடமிருந்தும் வைப்புப் பணமாக பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும், பாரிய பாவனையாளர்கள் தொடர்பில் தெரிவுசெய்யப்பட்ட விநியோக வலயம் - I இலுள்ள இரண்டு மாகாண அலுவலகங்களினால் பேணப்படும் வைப்புக்களை நடைமுறை சிட்டைப் பெறுமதியின் அடிப்படையில் வைப்புச்செய்யப்பட வேண்டிய உள்ளபடியான தொகையுடன் ஒப்பிடுகையில் போதுமானதாக காணப்படாமை வெளிப்பட்டது. 149 பாவனையாளர்களிடமிருந்து ரூபா 470 மில்லியன் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. அத்துடன், மேலும் 29 பாரிய பாவனையாளர்களுடன் பாதுகாப்பு வைப்பின்றி கொடுக்கல்வாங்கல் இடம்பெற்று வருவதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவர்களது நிலுவைத் தொகை ரூபா 10 மில்லியனாகும். அதன்படி, சபை அவ்வாறான பாவனையாளர்களுடன் அதிகூடிய கடன் இடருடன் கொடுக்கல்வாங்கலில் ஈடுபட்டு வருகின்றமை வெளிப்பட்டது.

(ஊ) கொழும்பு நகர அலுவலகத்தில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆறு மாதங்களிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 225 மில்லியன் தொகையான சாதாரண வழங்கல் கடன்பட்டோர் மீதியும் அம்மீதியின்

79 சதவீதமும் பொருத்தமான அறவிடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமையால் மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக உள்ளன.

(எ) சபையின் கொழும்பு நகர அலுவலக முடிவுறா வேலைகள் கணக்கில் 2011 ஜனவரி 01 இல் உள்ளவாறு நான்கு ஆண்டுகளிற்கும் மேலான மீதி ரூபா 13 மில்லியனாக மாத்திரமே காணப்பட்டமையால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட மீதி ரூபா 78 மில்லியனாக காணப்படுதல் சாத்தியமற்றதாகும். அதனால், கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முடிவுறா வேலைக்குரிய காலப்பகுப்பாய்வின் சரியான தன்மை ஐயத்திற்குரியதாகும்.

(ஏ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் ரிரான்ஸ்போமர் கம்பனியிடமிருந்து (சபையின் துணைக் கம்பனி) நிலுவையாக உள்ள தொகை ரூபா 11 மில்லியன் ஆனதுடன் அந்த மீதி மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது உள்ளது.

(ஐ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக மதத் தளங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவைத் தொகை ரூபா 2,418 மில்லியன் ஆகும்.

(ஒ) பாரிய பாவனையாளர்களிற்கான சாதாரண கடன் காலம் ஒரு மாதமாகும். இருப்பினும், சபையின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் பாரிய பாவனையாளர்களிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி 523 மில்லியன் மொத்த நிலுவைத் தொகையில் ரூபா 307 மில்லியன் தொகை மூன்று மாதங்களிற்கும் மேல் நிலுவையாக இருந்தது. ஆகையால், கடன் கட்டுப்பாட்டு முறைமையின் கண்காணிப்பு மிகவும் பலவீனமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) சபையின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் ரூபா 359 மில்லியன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (மின்சாரம்) மீதி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று மாதங்களிற்கும் மேலாக தீர்வுசெய்யப்படாது காணப்பட்டது.

(ஃ) வலயம் 4 இல் ரூபா 168 மில்லியன் தொகையான மூலதனமற்ற முடிவுறா வேலையில் ரூபா 34 மில்லியன் தொகையான முடிவுறா வேலை 2011 திசெம்பர் 31 இல் இருந்தவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக பூரணப்படுத்தாது காணப்பட்டது.

(க) முற்பணங்கள் மற்றும் முற்செலுத்தல்களிற்கு பொதுவான கணக்கீட்டு முறையொன்று காணப்படாதிருந்ததுடன் இந்நோக்கத்திற்காக பல்வேறு கணக்குகள் பேணப்பட்டிருந்தன. மேலும், 2011 திசெம்பர் 31 இல் இருந்தவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த முற்பண மற்றும் முற்செலுத்தல் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் அவதானிக்கப்பட்டன. ரூபா 343.104 மில்லியன் மொத்த பெறவேண்டிய தொகையில் 2011 திசெம்பர் 31 இல் இருந்தவாறு ரூபா 281.888 மில்லியன் தொகை அவ்வாறான பல்வேறுபட்ட கணக்குகளில் ஒரு ஆண்டுக்கும் மேலாக அறவிடப்படாது காணப்பட்டன.

## 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 8,732 மில்லியன் தொடர்பான நிதிக்கூற்றுக்களிலுள்ள பின்வரும் விடயங்களை அவ்விடயங்களிற்கெதிரே காட்டப்பட்டுள்ள ஆதாரச் சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது.

| **விடயம்** | **தொகை ரூபா மில்லியன்** | **கிடைக்கப்பெறாத சான்று** |
|---|---|---|
| திறைசேரிக் கடன் | 1,200 | தொடர்புடைய கோவைகள் |
| அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடனிற்கான ஏற்பாடு | கிடைக்கப்பெறவில்லை | மேற்கொள்ளப்பட்ட குறிப்பான ஏற்பாட்டிற்கான விபரமான பட்டியல் |
| அகற்றப்பட்ட மின்மாற்றிக் கணக்கு - கொழும்பு நகர அலுவலகம் | 160 | நீண்ட தாமதத்திற்கான காரண ங்கள் மற்றும் அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
| ஏனைய கடன்பட்டோர் - குறைவேலை- மூலதனமல்லாத | 390 | |
| • வலயம் 2 | 14 | |
| • தலைமையகம் | | |
| முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள், வைப்புக்கள் மற்றும் சீஈபீ ஊழியர்களிற்கான கடன்கள், ஏனைய கடன்பட்டோர் முதலியன (மேல் மாகாணம் வடக்கு –டபில்யூபீஎன்) | 2,409 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு |

| | | |
|---|---|---|
| வலயம் - 2 இன் ஏனைய கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்ட ஏனைய கடன்பட்டோர் | 3,584 | |
| பதிவழிக்கப்பட்ட களஞ்சிய முரண்பாடுகள் (மேல் மாகாணம்) | 22 | விபரமான பட்டோலைகள், தேவையான அங்கீகாரம், புலனாய்வு அறிக்கைகள் போன்றன. |
| முடிவுறாவேலை – வலயம் - 2 | 138 | விபரமான பட்டோலை மற்றும் பூர்த்திசெய்தலில் தாமதத்திற்கான காரணங்கள் |
| ஏனைய பிரிவுகளிற்கு மாற்றப்பட்ட பூர்த்தியாகாத மூலதன வேலைகள் (மேல் கொத்மலை செயற்திட்டம்) | 815 | மாற்றப்பட்ட விடயங்களின் விபரமான பட்டோலை மற்றும் பிரிவுகளின் பெயர் |
| மொத்தம் | 8,732 | |

(ஆ) வெளிநாடு/ அரசாங்கம்/ சீஈபீ இனால் நிதியிடப்பட்ட அநேக மின்சாரவழங்கல், விநியோக, பிறப்பித்தல் மற்றும் செயற்திட்டங்கள் காணப்பட்ட போதிலும் சுத்தமான சக்தி மற்றும் அணுகும் முன்னேற்ற செயற்திட்டத்தினைத் தவிர்த்து ஏனைய செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றத்தை கண்காணிக்க இயலுமான விதத்தில் தனியான கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் சம்பந்தமாக சபையினதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தினதும் நிதிக்கூற்றுக்களிற்கிடையே ரூபா 108,769 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 6,146 மில்லியன் பெறுமதியான மூன்று கடன்கள் தொடர்பாக உப-கடன் உடன்படிக்கைகள் காணப்படாதிருந்தது. ஆகவே அக்கடன்களிற்கான மீள் கொடுப்பனவு பட்டியல் மற்றும் வட்டிகள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ஈ) சேவை இணைப்பு வேலைக்கான சாதாரண காலம் 6 – 9 மாதங்களாகும். இருப்பினும், கொழும்பு நகர அலுவலகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதனது ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட வேலை பெறுமதி ரூபா 450 மில்லியனாக இருந்தமை வெளிப்பட்டது. அதனால், சம்பந்தப்பட்ட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்களிலும் கூட சேவைப் பிரதான வைப்புக்கள் பாவனையாளர் பங்களிப்புக் கணக்கிற்கு மாற்றப்படாமைச் சாத்தியம் காணப்பட்டது. ஆகையால் நீண்டகாலமாக பூரணப்படுத்தாத வேலைகள் தொடர்பில் பூரணப்படுத்துவதற்கு நீண்டகாலம் தாமதித்தமைக்கான காரணங்களை இனங்காண்பதற்கும் பாவனையாளர் பங்களிப்பின் சரியான தன்மையினை மதிப்பிடுவதற்கும் விபரமான பகுப்பாய்வு அறிக்கையொன்று கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(உ) பிரதானமாக முடிவுறுத்தல் அறிக்கைகள் இன்மையால் சபையின் வடமேல் மாகாண அலுவலகத்தின் ரூபா 186 மில்லியன் மற்றும் ரூபா 196 மில்லியன் தொகையான குறைவேலைகள் தீர்க்கப்படாது முறையே 2 முதல் 5 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வீச்சுடைய காலமாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. நீண்டகாலம் தாமதித்தமைக்கான காரணங்களை இனங்காண்பதற்கு விபரமான பகுப்பாய்வு அறிக்கையொன்று கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டம்

(i) **47 (1) (அ) ஆம் பிரிவு** – பிரிவின் படி, சபையின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கு காப்புறுதியினை ஏற்படுத்துவதற்காகவும் தொழிலாளர் இழப்பீட்டு கட்டளைச்சட்டத்தின் கீழ் எழுகின்ற மூன்றாம் தரப்பு இடர்கள் மற்றும் பொறுப்புக்களை தீர்ப்பதற்காகவும் சபை பொதுத் திறைசேரியுடன் காப்புறுதி ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டுமாயினும் அதற்கமைய இனங்கி ஒழுகியிருக்கவில்லை. எனினும் சபையின் சேதமுற்ற ஆதனங்களின் கிரயத்தினை ஈடுசெய்வதற்காக சுய காப்புறுதி ஒதுக்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு பேணப்பட்டிருந்தது. அத்துடன் அக்கணக்கில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மீதி ரூபா 6,572 மில்லியனாக இருந்தது.

(ii) **47 (1) (ஆ) ஆம் பிரிவு** – பிரிவின் படி, சபையினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பாக சபை பொதுத் திறைசேரியுடன் ஆழ் நிதியமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். கடன் மீட்டல் ஒதுக்கமொன்று காணப்பட்ட போதிலும் அது 2000 முதல் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வொதுக்கக் கணக்கில் (**ஆண்டின் தொடக்கத்தில் உள்ள மீதியென தவறாகப் பெயரிடப்பட்டிருந்தது – குறிப்பு இல.17.1 இனைப் பார்க்க**) காணப்பட்ட மீதி ரூபா 17,447 மில்லியனாகும்.

- **47 (2) (அ) ஆம் பிரிவு** – பிரிவின் படி, சபையின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கு பெறுமானத்தேய்வினை ஏற்படுத்துவதற்காக சபை பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடந்தோரும் ரூபா 1 மில்லன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித செயற்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் மீதி வருடாந்த நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.
- **47 (2) (ஆ) ஆம் பிரிவு** – பிரிவின் படி, சபையின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்து வருமான பணத்திலிருந்து மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்குடனும் சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சபை பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக சபை அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கக் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 165.45 மில்லியனாகும்.

(ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11ஆம் பகுதியின் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு முரணாக 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலுள்ள அதன் மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியின் 0.1 சதவீதமான பங்களிப்பின் அடிப்படையில் காப்புறுதி எஸ்கரோ நிதியத்தில் 2011 திசெம்பர் 31

இல் உள்ளவாறு ரூபா 3,710 மில்லியன் தொகையான அதன் நிதிகளை சபை முதலீடு செய்திருந்தது.

(இ) 1990 மார்ச் 09 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

- சுற்றறிக்கை அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு பத்திரிகை விளம்பரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் நாடுதளுவிய ரீதியில் தகைமையுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோராது சபை எழுதுவினைஞர்கள், காசாளர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் போன்ற நுட்பமற்ற மற்றும் பகுதியளவில் நுட்பமுள்ள பதவியனரை வருடந்தோரும் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது.
- 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியின் படி, சகல பொது முயற்சிகளும் தமது சகல பிரதான செயற்பாடுகளையும் உள்ளடக்கும் விதத்தில் தமக்கென அவ்வப்போது திருத்தப்பட்டு நாளதுவரையாக்கப்பட்ட முறைமைகள்/கையேடுகளை கொண்டிருத்தல் வேண்டும். இருப்பினும், 24 ஆண்டுகளிற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் கையேடுகளை சபை நாளதுவரையாக்கியிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 கிரயக் கட்டமைப்பு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான சபையின் விற்பனைக் கிரயம் மற்றும் மாற்றத்தின் பொழிப்பொன்றை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| விபரம் | ஆண்டிற்கான செலவினம் 2011 | 2010 | மாற்றம் | % |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மின்வலு நிலைய எரிபொருள் கணக்கு | 24,982.470 | 16,350.498 | 8,631.771 | 53 |
| ஐபீபீ இடமிருந்து மின்வலுக் கொள்வனவு | 75,276.325 | 57,647.289 | 17,629.036 | 31 |
| புதுப்பிக்கத்தக்க வலு | 8,867.771 | 8,019.195 | 848.576 | 11 |

| | | | | |
|---|---|---|---|---|
| கொள்வனவு | | | | |
| ஆளனிச் செலவினம் | 11,745.872 | 11,635.701 | 110.171 | 1 |
| பொருட்கள் கிரயம் | 12,989.753 | 5,124.311 | 7,865.441 | 153 |
| வதிவிடச் செலவினம் | 774.031 | 656.127 | 117.904 | 18 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 2,203.607 | 1,970.139 | 233.468 | 12 |
| பொருள் விலை முரண் | (2,919.687) | (1,785.179) | (1,134.508) | 64 |
| மேந்தலை அறவீடுகள் | (1,255.475) | (961.658) | (293.817) | 31 |
| ஊழிய வீத முரண் | (803.281) | (548.037) | (255.244) | 47 |
| பெறுமானத்தேய்வு | 18,297.458 | 15,990.333 | 2,307.126 | 14 |
| ஏனைய செலவினம் | 2,268.827 | 2,069.761 | 199.066 | 10 |
| **விற்பனைகள் கிரயம்** | **152,427.470** | **116,168.481** | **36,258.989** | **31** |

மேற்படி தகவல்களின் படி, சபையின் மொத்தச் செலவினத்தில் ஏறத்தாழ 70 சதவீதமானவை மின்வலு கொள்வனவு மற்றும் பிறப்பித்தலுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தமை வெளிப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நியம விலையில் மதிப்பிடப்பட்ட பொருள் கிரயமானது வழமைக்கு மாற்றமாக 153 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.1.2 நிதிசார் விளைவுகள்

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 19,266 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்திற்கெதிராக முன்னைய ஆண்டில் ரூபா 4,832 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ஏற்பட்டிருந்தமையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு விளைவில் ரூபா 24,098 மில்லியனால் பின்னடைவைக் காட்டுகின்றது. அத்தகைய பின்னடைவிற்கான பிரதான காரணங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| விடயம் | 2011 ரூபா மில்லியன் | 2010 ரூபா மில்லியன் | அதிகரிப்பு / (குறைவு) ரூபா மில்லியன் | % | நட்டத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|
| **விற்பனைகள்** | **132,460** | **121,226** | **11,234** | 46.6 | 47 |
| எரிபொருள் | (31,992) | (16,551) | 15,441 | 93.3 | -64 |
| மின்வலு கொள்வனவு | (84,144) | (65,466) | 18,678 | 28.5 | -78 |
| செயற்பாடு மற்றும் பேணுகை | (22,972) | (21,456) | 1,516 | 7.1 | -06 |
| விலை முரண் | 4,978 | 3,295 | 1,683 | 51.1 | 07 |
| பெறுமானத்தேய்வு | (18,297) | (15,990) | 2,307 | 14.4 | -10 |
| **விற்பனைகள் கிரயம்** | **(152,427)** | **(116,168)** | **36,259** | **31.2** | |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | **(19,967)** | **5,058** | **25,025** | **494.8** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏனைய வருமானம் | 4,544 | 4,230 | 314 | 7.4 | 01 |
| செயற்பாட்டுச் செலவினம் | (3,842) | (4,456) | (614) | (13.8) | 03 |
| **செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **(19,265)** | **4,832** | **(24,097)** | **(498.7)** | **100** |

(அ) நீர்மின்சார உற்பத்தி குறைவடைந்ததன் காரணமாக எரிசக்தி மின்சார உற்பத்தி அதிகரித்து இறுதியில் சுதந்திர மின்வலு வழங்குனர்களிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கும் எரிபொருளிற்கு சபை அதிகளவு செலவினத்தை மேற்கொள்ளவும் வேண்டி ஏற்பட்டது. முன்னைய ஆண்டிற்கெதிராக மேற்படி இரண்டு காரணிகளினதும் கிரயங்கள் 2011 ஆம் ஆண்டில் ரூபா 15,441 மில்லியன் மற்றும் 18,678 மில்லியன் தொகையால் அதிகரித்து மொத்த நட்டத்திற்கு முறையே 64 சதவீதம் மற்றும் 78 சதவீதத்தால் பங்களித்திருந்தன.

(ஆ) 2011 இல் பெறுமானத்தேய்வுக் கொள்கை மாற்றப்பட்டமையால் வருமானக் கூற்றிற்கு அண்ணளவாக ரூபா 2 பில்லியனை மேலதிக கிரயத்தினை சாட்ட வேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டிருந்ததமையின் விளைவாக 10 சதவீதத்தால் நட்டம் அதிகரித்திருந்தது.

(ஆ) கேள்வி ஓரளவு அதிகரித்தமையின் விளைவாக ரூபா 11,234 மில்லியன் மேலதிக வருமானம் ஈட்டப்பட்டிருந்த போதிலும், நியமக் கிரயத்தில் இருப்பு விடயங்களை வழங்கியமையால் அடைந்து கொள்ளப்பட்ட சாதகமான விலை முரண்களிற்கு மேலதிகமாக 2011 இல் செய்யப்பட்ட வரித் திருத்தங்கள் 2011 இல் சபைக்கு நட்ட நிலையினை விளைவித்துள்ளன.

### 2.1.3 திரவ நிலைமை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சீஈபீ இன் திரவ நிலைமையை பின்வரும் விகிதங்கள் காட்டுகின்றன.

| | **விகிதம்** | **2011** | **2010** |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை விகிதம் | 0.9:1 | 1.2:1 |
| (ஆ) | விரைவுச் சொத்து விகிதம் | 0.8:1 | 0.9:1 |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்களிற்கு காசு மற்றும் வங்கி மீதி | 0.01:1 | 0.02:1 |

(அ) மற்றும் (ஆ) இலுள்ள விகிதங்கள் கொடுக்கப்பட்ட வீச்செல்லையான முறையே 2:1 மற்றும் 1:1 இற்கிடையில் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி

பகுப்பாய்வின்படி நீர் மின் உற்பத்தியின் வீழ்ச்சி காரணமாக முன்னைய ஆண்டிற்கெதிராக மீளாய்வாண்டில் சபையின் திரவ நிலைமை குறித்த சில மட்டத்திற்கு பின்னடைந்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 மின்வலு உற்பத்தி

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தி விபரங்களின் பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2011 | | 2010 | | வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|
| மூலம் | ஜிடபிள்யூஎச் | % | ஜிடபிள்யூஎச் | % | ஜிடபிள்யூஎச் | % |
| நீர்மின் | 4,018 | 35 | 4,988 | 46 | -970 | -11 |
| அனல்மின் | 5,748 | 50 | 4,994 | 47 | 754 | 3.2 |
| உளை | 1,038 | 9 | 0 | | 1,038 | 9.0 |
| நீர்மின் சிற்றளவு | 604 | 5 | 646 | 6 | -42 | -0.8 |
| காற்று | 3 | 0 | 3 | 0 | 0 | 0.0 |
| என்சீஆர்ஈ | 118 | 1 | 83 | 1 | 35 | 0.2 |
| மொத்தம் | **11,529** | **100** | **10,714** | **100** | **815** | 0.0 |

மேற்படி தகவல்களிற்கமைய பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நீர்மின்சார உற்பத்தியானது மழைவீழ்ச்சி குறைவு காரணமாக 4,988 ஜீடப்லியூஎச் இலிருந்து 4,018 ஜீடப்லியூஎச் இற்கு வீழ்ச்சியடைந்து 11 சதவீத குறைவை காட்டியது. இருப்பினும், அக்குறைபாடு எரிசக்தி மற்றும் அனல்மின் என்பவற்றால் பதிலீடு செய்யப்பட்டமையின் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டிற்கான மொத்த மின்சார உற்பத்தி 815 ஜீடப்லியூஎச் ஆல் அதிகரித்தமையானது மின்சாரத் துண்டிப்பின்றி சீஈபீ தனது செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு இயலுமாயிருந்தது.
- 2010 இல் பசுமை சக்திவள மூலங்களிலிருந்து நாட்டின் மொத்த மின்சாரக் கேள்வியில் 53 சத வீதத்தினை உற்பத்திசெய்வதற்கு சபைக்கு முடிந்திருந்த போதிலும் 2011 இல் அது 41 சதவீதமாகக் குறைவடைந்து 12 சதவீத குறைவைக் காட்டியது.

### 2.2.2 மின்சார விற்பனை

2011 இற்கான சபையின் புள்ளிவிபர தொகுப்பிலிருந்து பல்வேறு பாவனையாளர்களை பெறுமதிகள் மற்றும் கணியங்கள் ஆகிய இரண்டு வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட விற்பனை வருமானங்கள் தொடர்பான தகவல் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

| பாவனையாளர் வகை | பாவனையாளர் | | விற்பனை | | | அலகொன்றின் (கேடப்லியூஎச்) விற்பனை விலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | ஜீடப்லியூஎச் வளர்ச்சி | % | ரூபா மில்லியன் | % | ரூபா |
| உள்நாடு | 4,165,738 | 88 | 3,379 | 34 | 33,131 | 25 | 9.80 |
| மதத்தளங்கள் | 28,320 | 1 | 51 | 0 | 359 | 0 | 7.03 |
| பொது நோக்கம் | 475,380 | 10 | 1,927 | 19 | 41,674 | 32 | 21.63 |
| கைத்தொழில் மற்றும் ஹோட்டேல் | 48,008 | 1 | 3,290 | 33 | 42,328 | 32 | 12.87 |
| எல்ஈசீஓ | 1 | 0 | 1,267 | 13 | 14,968 | 11 | 11.81 |
| வீதி விளக்குகள் | 1 | 0 | 109 | 1 | - | - | - |
| | **4,717,448** | **100** | **10,023** | **100** | **132,460** | **100** | **13.22** |

மேற்கூறப்பட்ட பகுப்பாய்வின் படி, மொத்த பாவனையாளர் தொகுதியில் தமது அன்றாட உள்ளூர் நோக்கத்திற்காக மின்சாரத்தினை உபயோகிக்கும் உள்ளூர் பாவனையாளர்கள் 88 சதவீதத்தினை பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் 2011 இல் விற்பனை செய்யப்பட்ட அலகுகளில் 34 சதவீதத்தினைப் பயன்படுத்தி சபையின் மொத்த வருமானத்திற்கு 25 சதவீத பங்களிப்புச் செய்திருந்தனர். ஆனால் அந்நோக்கத்திற்கான சராசரி விற்பனை விலை மிகவும் குறைவாக காணப்பட்டது. அதனால், குறைந்த மட்டத்தில் பாவனையினைப் பேணுவதற்கு மின்சார சேமிப்பிற்கான விழிப்புணர்ச்சியூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

வங்கிகள், கம்பனிகள் மற்றும் அரசாங்க அலுவலகங்கள் என்பன பொதுநோக்க பாவனையாளர்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. அவை மொத்த பாவனையாளர் தொகுதியில் 10 சதவீதத்தினை பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் 2011 இல் விற்பனை செய்யப்பட்ட அலகுகளில் 19 சதவீதம் பயன்படுத்தப்பட்டு சபையின் மொத்த வருமானத்திற்கு 32 சதவீத பங்களிப்பினை வழங்கியிருந்தன.

கைத்தொழில்களும் ஹோட்டேல்களும் 2011 இன் பாவனையாளர் தொகுதியில் ஒரு சதவீதத்தினை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் விற்பனை செய்யப்பட்ட

அலகுகளில் அவற்றினது பயன்பாடு 33 சதவீதமாக காணப்பட்டதுடன் ஆண்டின் வருமானத்திற்கு 32 சதவீத பங்களிப்பினை வழங்கியிருந்தன.

மிகுதியான ஒரு சதவீதம் ஏனைய பாவனையாளர் வகுதியினை பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் விற்பனை செய்யப்பட்ட அலகுகளில் 14 சதவீதம் பயன்படுத்தப்பட்டு 2011 இன் வருமானத்திற்கு 11 சதவீத பங்களிப்பினை வழங்கியிருந்தன.

## 2.3 சர்ச்சசைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உள்ளடங்கலாக அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் நிதி மற்றும் நிருவாகம் தொடர்பாக ஒரே சீரான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளைப் பேணுவதற்காக காலத்திற்குக்காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் பொது நிருவாக சுற்றுநிருபங்கள் என்பவற்றை இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை இலங்கை மின்சாரசபைக்கான நிருவாக ஒழுங்கு விதிகளாக கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்காதுவிட்டால் அவை பிரயோகிக்கப்படுவதில்லை என்ற நிலையை 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்ததப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க சபை பேணியிருந்ததென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான உதாரணங்களில் சில கீழே தரப்படுகின்றது.

(i) 2008 யூலை 01 முதல் சபையின் அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்தப்பட்ட விசேட இடைக்கால படி செலுத்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- படியினை முற்பணமாகச் செலுத்தி அப்படியினை 2009 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வரும் உத்தேச சம்பளத் திருத்தத்துடன் உட்படுத்துவது என முதலில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், தொடர்ந்தும் இப்படி செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு **சம்பள அதிகரிப்பு** கணக்கிற்கு எதிரான முற்பணத்தில் திரண்டிருந்த ரூபா 235 மில்லியன் தொகை அவ்வாறு செய்வதற்கு அதிகாரமற்ற பொது முகாமையாளரின் அங்கீகாரத்துடன் சம்பளக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.
- 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- 2009 மற்றும் 2012 இல் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சம்பளத் திருத்தங்களின் போது கருத்திற்கொள்வதற்காக படி தொடர்பான விபரங்கள் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1998 மார்ச் 08 ஆந் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் - 14 சதவீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சபை 4.2 சதவீதத்தில் கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சபை பாரிய திரவத்தன்மை பிரச்சினையை எதிர்கொண்டிருப்பினும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஊழியர்களிற்கு கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) அடுத்த சம்பளத் திருத்தத்திலிருந்து உழைக்கும் பொழுதே செலுத்தும் வரிப் பொறுப்பை ஊழியர்களிற்கு சுமத்துமாறு சீபீ/07/2116/332/050 ஆம் இலக்க தீர்மானத்தின் ஊடாக 2007 திசெம்பர் 13 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக சபை அதனது ஊழியர்களால் செலுத்தப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பீஏவைஈ) செலுத்துகின்றது. சொல்லப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, சபையால் செலுத்தப்பட்ட உழைக்கும் பொழுதே செலுத்தும் வரி, ரூபா 712 மில்லியனாகும்.

(iv) 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு அமைச்சரவையின் அல்லது பொது நிர்வாக அமைச்சரின் அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சபையினால் முப்பத்தி ஒன்பது பல்வேறு பதவியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2011 இல் அவ்வாறான படிகளாக ரூபா 426 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமையினை மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனை வெளிப்படுத்தியது.

(ஆ) தரப்பட்ட தகவல்களின்படி, சபையின் நிதி முகாமையாளருக்கு முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் கையளிக்கப்படாதிருந்த போதிலும், 1990 ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதி நிதியத்தின் வெளிவாரியான புதிய முதலீடு தொடர்பாக அவர் தீர்மானம் எடுத்திருந்தார்.

(இ) 2008 மார்ச் 31 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி சபையின் 10 சதவீத புதுப்பிக்கத்தக்க சக்திக் கிரயம் நிலைபேராண சக்தி அதிகார சபையால் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், மேலே காட்டப்பட்ட ஒழுங்கின்படி, சபைக்கு கிடைக்கவேண்டிய அத்தகைய புதுப்பிக்கத்தக் சக்திக் கிரயம் நிலைபேராண சக்தி அதிகார சபையால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த மீளளிக்கத்தக்க தொகை ரூபா 897 மில்லியனாகும். எனினும், நிலைபேராண சக்தி அதிகாரசபை நிதிக் கூற்றுக்களில் அதனை ஒரு பொறுப்பாகவும் பதிவு செய்திருக்காததுடன் சபை அந்த மீதியின் உறுதிப்படுத்தலை பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காப்புறுதி ஒதுக்க நிதிய மீதி மற்றும் காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு என்பவற்றுக்கிடையில் ரூபா 2,545 மில்லியன் தொகையான குறைவு அவதானிக்கப்பட்டதுடன் சபையின் சுய காப்புறுதிப் பத்திரத்திற்கிணங்க முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) லெகோ மின்சாரக் கம்பனிக்கு பல ஆண்டுகளாக சபை மின்சாரத்தை விற்பனை செய்திருந்த போதிலும், அந்த இரு தரப்பினரிற்குமிடையில் விற்பனை உடன்படிக்கை எதுவும் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக முறையான ஏற்பாடொன்றும் காணப்படவில்லை.

(ஊ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 60,133 மில்லியனில் ரூபா 51,139 மில்லியன் ஒரு ஆண்டிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டது. மேற்படி நிலுவை மீதியினை 3 பில்லியன் தொகையான வருடாந்த தவணைப் பணத்தின் மூலம் 2015 முதல் ஆரம்பித்து 15 ஆண்டு காலப்பகுதிக்குள் தீர்ப்பதற்கு சீஈபீ இற்கு வாய்ப்பளிக்கும் வகையில் 5, 10 மற்றும் 20 ஆண்டுகள் முதிர்வு காலம் கொண்ட 52 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளை வழங்குவதற்கும் முறிகளின் கிரயத்தினை மீள அறவிடுவதற்காக பொதுத் திறைசேரிக்கும் சீஈபீ இற்கும் இடையே உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கும் 2011 யூலை 28 ஆந் திகதி பொதுத் திறைசேரிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதற்கமைய, சீஈபீ இடமிருந்து சீபீசீ இற்கு வருமதியான ரூபா 50.5 பில்லியன் தொகையினை தீர்ப்பதற்காக 2012 ஜனவரி 09 ஆந் திகதி இலங்கை வங்கிக்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் திறைசேரி முறிகளை வழங்கியிருந்ததுடன் அத்திணைக்களத்தின் 2012 ஜனவரி 11 ஆந் திகதிய பீடீ/டீஎஸ்என்ஏ/பீடீ/09/468 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சபைக்கு

அறிவித்திருந்தது. இருப்பினும், மேற்படி நிலமை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

- **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- **முடிவுக்கு கொண்டுவரப்பட்ட கடன்பட்டோர் - சாதாரண வழங்கல்கள்**

-----------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 11,193 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,062 மில்லியன் தொகை இறுதிக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து குறைந்தது ஆறு மாத காலத்தில் அவர்களது நிலுவைகளைச் செலுத்தாமையால் சபையினால் மின்மானிகள் அகற்றப்பட்ட வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவையாக காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆறு ஆண்டு தவணைக்காலம் ஏற்கனவே காலவதியாகியதன் காரணமாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 47 மில்லியன் நிலுவையினைக் கொண்டுள்ள பாவனையாளர்களிற்கெதிராக சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளும் நிலையில் சபை காணப்படவில்லை. மேலும், ரூபா 450 மில்லியன் கூட்டுமொத்தமான மற்றுமொரு நிலுவை மீதியின் 6 ஆண்டுகள் தடைக் காலம் விரைவில் முடிவடைய உள்ளமையால் அதனை அறவிடுதல் ஐயத்திற்குரியதாகும். எவ்வாறாயினும், இம்மீதிகளை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதிப் பொது முகாமையாளரினால் (பாவனையாளர் சேவைகள்) 1999 திசெம்பர் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1999 – 12 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறவீட்டு நடைமுறையுடன் இனங்கி ஒழுகாமையால் மேலே குறிப்பிட்ட ரூபா 497 மில்லியனிற்கு மேலதிகமாக 2011 திசெம்பர் 31 இல் நிலுவையாகவுள்ள ரூபா 655 மில்லியனில் ரூபா 126 மில்லியனை அறவிடுதல் ஐயத்திற்குரியதாகும். இருப்பினும், காலம் கடந்தமைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் களிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 1999 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் II ஆம் பட்டோலையின் 1(4) ஆம் உப பிரிவின் படி, ஒரு பாவனையாளர் அவரின் அல்லது அவளின் நிலுவையாகவுள்ள மீதிகளை முழுமையாக

தீர்க்கும் வரைக்கும் பாவனையாளரின் ஏனைய வளவிற்கு மின்சார இணைப்பை வழங்குதல் கூடாது. எவ்வாறாயினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக, அவர்களது சிட்டை நிலுவைகளை கவனத்திற்கொள்ளாது புதிய இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த முறைகேட்டிற்கெதிராக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாகாண அலுவலகம் | கணக்கு இலக்கம் | | நிலவையாக உள்ள தொகை ரூபா |
|---|---|---|---|
| | பழைய இணைப்பு | புதிய இணைப்பு | |
| கிழக்கு | 2402187506 | 2470100143 | 536,851 |
| | 3594268918 | 3594268810 | 361,309 |
| | 3504463309 | 3504463309 | 322,541 |
| ஊவா | 3503514900 | 3570101614 | 833,004 |
| | 2304483003 | 2304291503, 2304291309, 2304291406, 2304251005, 2309048305, 2305402805 | 306,615 |

மேற்படி அவதானிப்புக்களின் படி, கடன்பட்டோர் மீதான கடன் கட்டுப்பாடு மாத்திரமன்றி வாடிக்கையாளர்களிடமிருந்து உரிய வேளையில் நிலுவைகளை அறவிடுவதற்குத் தவறிய உத்தியோகத்தர்களிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொள்ளலும் மிகவும் பலவீனமாகக் காணப்படுகின்றது என்பது வெளிப்படுத்தப்பட்டது. நீண்டகாலமாக பொருத்தமான மற்றும் காலரீதியான நடவடிக்கைகளை எடுக்காது பொது நிதியினை துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளித்தலின் இறுதி விளைவானது தகவலின்மை, கணக்கீட்டு வழு, பாவனையாளரை கண்டுபிடிக்க முடியாமை போன்ற காரணங்களை வழங்கி அவற்றை கணக்கேடுகளிலிருந்து பதிவழித்தலாகும். அண்மையில் செய்யப்பட்ட அவ்வாறான சில பதிவழித்தல்கள் வருமாறு.

| பதிவழிப்பதற்குத் சபை தீர்மானம் எடுக்கப்பட்ட ஆண்டு | மீதியின் விபரங்கள் | பதிவழிக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன் |
|---|---|---|
| 2001 | 1989 – 1998 காலப்பகுதி தொடர்பான ஒவ்வொன்றும் ரூபா 4,000 இற்கு குறைந்த 57,389 சாதாரண வழங்கல் மீதிகள் | 37.78 |
| 2007 | 1989 – 1998 காலப்பகுதி தொடர்பான ஒவ்வொன்றும் ரூபா 4,000 இற்கு மேற்பட்ட 9,675 சாதாரண வழங்கல் மீதிகள் | 206.03 |
| 2007 | 1999 – 2001 காலப்பகுதி தொடர்பான ஒவ்வொன்றும் ரூபா 4,000 இற்கு மேற்பட்ட 21,544 சாதாரண வழங்கல் மீதிகள் | 123.26 |
| 2007 | 1999 - 2001 காலப்பகுதி தொடர்பான 314 மொத்த வழங்கல் மீதிகள் | 80.90 |
| **மொத்தம்** | | **447.93** |

மேற்படி தகவல்களிற்கு மேலதிகமாக ரூபா 401 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோரை பதிவழிப்பதற்கான சபைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இனங்காண்பதற்கு புலனாய்வு செய்யப்படாமலும் பொறுப்பினை நிச்சயிக்காமலும் ரூபா 22 மில்லியன் தொகையான இருப்புக் குறைவு ஒரு ஆண்டிற்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்தது.

(இ) புத்தளம் இறங்குதுறையில் நிலக்கரியினைக் கையாள்வதற்கு இழுவைப்படகுகள் மற்றும் பாரிய படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக சபை ரூபா 114 மில்லியனை செலவிட்டிருந்ததுடன் அச்சொத்துக்களின் கிரயம் சபையின் நிதிக்கூற்றுக்களில் நிலக்கரி மின்வலு செயற்திட்டத்தின் கீழ் இதுவரை முடிவுறா வேலையாக காணப்பட்டது. இருப்பினும், லங்கா கோல் கம்பனி (சபையின் துணைக் கம்பனிகளில் ஒன்று) அச்சொத்துக்களை அதன் இறங்குதுறை கையாள்கைக்காக பயன்படுத்துவதுடன் நிலக்கரி மெற்றிக் தொன் ஒன்றைக் கையாள்வதற்காக ஐ.அமெ.டொ. 2 வீதம் சபையிடமிருந்து அறவிடப்படுகின்றது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியினால் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை ரூபா 102 மில்லியனாகும்.

மேலும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் ஐந்தொகையில் நிலக்கரியினை கையாள்வதற்காக வெளிச்சமூட்டல் உபகரணங்கள் காணப்படவில்லை. இருப்பினும் நிலக்கரி மெற்றிக் தொன் ஒன்றைக் கையாள்வதற்கு ஐ.அமெ.டொ. 1.70 வீதம் வெளிச்சமூட்டல் உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வாக சபை தாக்கல் செய்திருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 87 மில்லியனாகும்.

லங்கா கோல் கம்பனி (சபையின் துணைக் கம்பனிகளில் ஒன்று) ஒரு தனிப்பட்ட அமைப்பாக இருப்பதனால் சபைக்கு பட்டியல்களை வழங்குவதன் ஊடாக அக்கம்பனியினால் சேகரிக்கப்பட்ட நிதிகள் சுயநிதியினை உருவாக்காது வெளிச்சமூட்டல் உபகரணங்களை மீளமைப்பதற்கான ஒதுக்கங்களைத் தோற்றுவிப்பதற்கும் வெளிச்சமூட்டல் உபகரணங்களை பேணுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. சபை பாரிய நிதி நெருக்கடியினை எதிர்கொண்டிருந்த போதிலும் அவ்வாறான தேவையற்ற செலவினங்களை செலுத்தியிருந்தது.

(ஈ) 45,000 மெற்றிக் தொன் பதப்படுத்தாத நிலக்கரியினைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 443 மில்லியன் முற்பணத் தொகையொன்றை 2010 ஆம் ஆண்டில் சபை லங்கா கோல் கம்பனிக்குச் செலுத்தியிருந்தது. ஆனால் கம்பனியினால் ஒப்படை முழுவதும் வழங்கப்படாதிருந்ததுடன் வழங்கப்பட்ட முற்பணத்தில் ரூபா 76 மில்லியன் மற்றும் ரூபா 159 மில்லியன் தொகைகள் முறையே வரையறுக்கப்பட்ட லங்கா கோல் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட சிலோன் சிப்பிங் கம்பனி என்பவற்றால் 2011 ஆம் ஆண்டின் இறுதி வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், முற்பணங்களை அறவிடுவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபையின் முறையற்ற நிதி முகாமைத்துவம் காரணமாக மேலே (இ) மற்றும் (ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட முறைகளினூடாக சபையிடமிருந்து திரட்டப்பட்ட நிதிகளை முதலீடு செய்வதன் மூலம் கம்பனி ரூபா 55 மில்லியன் முதலீட்டு வருமானத்தினை சம்பாதித்திருந்தது.

(ஊ) 2009 முதல் கம்பனியிடமிருந்து நிலக்கரியினை சபை தொடர்ச்சியாக கொள்வனவு செய்து வருகின்ற போதிலும் லங்கா கோல் கம்பனியுடன் வர்த்தக உடன்படிக்கையொன்றில் அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் சபை கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(எ) ஒவ்வொரு வலயத்திலுமுள்ள நிர்மாணக் கிளைகள் அவற்றால் பொறுப்பேற்கப்பட்ட மின்சார வேலைகள் தொடர்பில் மூல மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் அளவுத் தொகையில் பிதிவேடுகளைப் பேணிவருகின்ற அதேவேளை நிதிப்பிரிவானது உள்ளபடியான பெறுமதி மற்றும் அளவுத் தொகையில் தனது ஏடுகளைப் பேணிவருகின்றது. அதன் காரணமாக இவ்விரு பதிவேடுகளையும் கணக்கிணக்கம் செய்ய முடியாதுள்ளது.

## 2.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பதிவழிக்கப்பட்ட இனங்காணப்பட்ட நட்டங்களாக கருதப்படக்கூடிய ஐயக்கடன் தொகைகள் முறையே ரூபா 226 மில்லியன் மற்றும் ரூபா 1,513 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டள்ளன.

| | 2011 | 2010 |
|---|---|---|
| **வியாபார கடன்பட்டோர்கள்** | | |
| வலயம் - I | 41 | - |
| தலைமை அலுவலகம் | 160 | 1,510 |
| **ஏனைய கடன்பட்டோர்** | | |
| தலைமை அலுவலகம் | 25 | 3 |
| **மொத்தம்** | **226** | **1,513** |

## 2.6 செயற்திட்டத் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமனலவெவ மினி நீர் மின் செயற்திட்டம் - ஆண்டிற்கு 10 ஜீடபிள்யூஎச் 2006 இற்கு முனனர் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நீர்த்தேக்கத்தில் ஏற்பட்ட நீர்க்கசிவு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. செயற்திட்டத்தினை திருத்துவதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 200 மில்லியன் தொகையாக இருந்ததுடன் இது மீளாய்வாண்டின் இறுதிவரையும் ஆய்வு மட்டத்திலேயே இருந்தது.

(ஆ) 9 மின்சாரம் வழங்கல் செயற்திட்டங்களிற்காக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின்கீழ் 2011 இற்கான ஆண்டு மதிப்பீடுகளில் சபைக்கு ரூபா 4,022 மில்லியனை அரசாங்கம் ஒதுக்கீடு செய்திருந்தது. எனினும் அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து எதுவித பயன்பாடும் 2011 இல் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பதவியணியினர் திருத்தம் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) மனித வளங்கள் முகாமைத்துவத்திற்கான தரவு அடிப்படை பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில்நுட்பத் தரங்களில் பிரதான பதவிகளிற்கு 173 வெற்றிடங்கள் இருந்தன.

(ஈ) சபையினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒப்பந்த, தற்காலிக மற்றும் வெளிவாரி மூல ஊழியர்களிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்படவில்லை.

(உ) தொழிலாளர், அலுவலக உதவியாளர் மற்றும் இணைந்த பதவிகள் போன்றவாறான குறைந்த தரங்களில் சபையினால் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்கள் உள்ளகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் எழுதுவினைஞர் தரங்கள் போன்ற உயர் பதவிகளிற்கு பின்னர் பதவியுயர்த்தலை சபை வழமையாகக் கொண்டிருந்ததது. இந்நடைமுறையினால் குறித்த பதவிகளிற்கு திரனற்ற ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டமையினை விளைவித்துள்ளது. இது வினைத்திறனான முகாமைத்துவத்திற்கு பாதகமான தாக்கம் செலுத்தியிருந்தது. இதன்காரணமாக அதன் நிரந்தரப் பதிவியினருக்கு மேலதிகநேர வேலை முதலிய கொடுப்பனவிற்கு மேலதிகமாக தகைமையுள்ள நபர்களை சபை வெளி மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்கின்றது.

(ஊ) பிரதான பதவிகளிற்கு முழுமையாக சிரேஷ்ட அடிப்படையில் ஆட்கள் தெரிவு செய்யப்படுவதைத் தவிர்த்து பொருத்தமான வெற்றிகரமான திட்டமொன்று காணப்படாமை அவதானிக்கப்பட்டது. நிறுவனத்திற்கேற்படும் பாதக தாக்கத்தினைக் கருத்திற்கொள்ளாது ஓய்வுபெறுவதற்குள்ள நபர்களிற்குச் சாதகமான விதத்தில் குறுகிய காலத்திற்காக உத்தியோகத்தர்கள் பதவியுயர்த்தப்பட்டிருந்தனர்.

(எ) உயர் பதவிகளிற்கு உறுதியான இடமாற்றக் கொள்கையொன்று காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபையின் கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

## 2.9 கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழு நான்கு அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது. அரசாங்க நிறுவகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறைவேற்றுத் தரமற்றவர்களாகும் அவர்களில் மூன்று அங்கத்தவர்கள் குழுவானது திறைசேரி பிரதிநிதியால் தலைமை தாங்கப்படுவதுடன் மீளாய்வாண்டில் ஆறு கூட்டங்கள் நடைபெற்றிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் என்பன முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆ) இடைக்கால நிதிக்கூற்றுக்கள், புலனாய்வு அறிக்கைகள், மாதாந்த நிதி மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம், பாதீட்டுக் கட்டுப்பாடுகள், சபை தீர்மானங்கள் அமுல்படுத்தப்படுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள், செயற்பாட்டுத் திட்டம், கொள்வனவுத் திட்டம் முதலியன மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.10 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மையானவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
(இ) பதிவேட்டுப் பொருட்கள் கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்
(ஊ) முதலீடுகள் மற்றும் துணைக் கம்பனிகள் மீதான கட்டுப்பாடு

(எ) நடைமுறை வேலை
(ஏ) செயற்திட்ட முகாமைத்துவமும் கட்டுப்பாடும்
(ஐ) பாதீடு
(ஒ) பதவியினர் கடன்கள்
(ஓ) விற்பனைகள்